# ஆவி உலகப்பேச்சு

ஆய்வு நூல்

ஆசிரியர் :

மெய்ப்பொருள் காண்போன்

வெளியிடுவோர் :

ஆதிபகவன் இலக்கிய மன்றம்

அண்ணமங்கலம், கன்னலம்.

1978

வாசகர் பெருமக்களே!

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"

எனும் ஜைன அறவோர் மொழிநின்று இந் நூலை ஆழ்ந்து படியுங்கள்.

திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர் வாக்கு மூலங்களையும், பெரிய புராணக் காரரின் போலிக் கதைகளையும் ஒப்புநோக்கி ஆய்ந்து உண்மை காணுங்கள்.

"உண்மைத் தெளிமின்
உயர்வுள்ளம் பெறுமின்"

# ஆய்வுரை விருந்து

1965 ஆம் ஆண்டு சென்னை மயிலை கஸ்தூரி ஆர்ட்ஸ் கிளப்பினர் 'ஞானப்பால் நாடகம்' என்ற பெயரில் திருஞான சம்பந்தர் கதையை நாடகமாக நடத்தியபோது, ''அப்பர், சம்பந்தர் ஆவி உலகப் பேச்சு'' என்ற தலைப்பில் துண்டு வெளி யீடாக, நாடக அரங்கில் பலருக்கும் வழங்கிய வெளியீடே இந் நூல். இதில் மேலும் சில வரலாற்றுச் செய்திகளைச் சேர்த்து மீண்டும் வெளியிடுகின்றோம். 1965 இல் வெளியிட்டு, அந் நாடகமும் தடைசெய்யப்பட்டு, வெற்றி கண்ட பின்னரும் இவ் வெளியீட்டை இன்று ஏன் மறுபதிப்பாக வெளியிடவேண்டும் எனச் சிலர் ஐயுறலாம். காரணமின்றிக் காரியமில்லை என்பதற் கொப்ப, இந் நூலை வெளியிடத் தூண்டும் காரணம் ஏற்பட்டது.

11—12—1977 ''தினமணி சுடரில்'' பெரிய புராண மூன்றும் தொகுதி திருஞானசம்பந்தர் ஆய்வு நூலைப் பற்றி மதிப்புரை வந்தது. அந் நூலில் சமணர்களைக் கழுவேற்றியச் செய்தி குறித்து அந் நூலாசிரியர் எழுதிய பகுதியை மதிப்புரை ஆசிரியர் எடுத்துக்காட்டி பின்வருமாறு எழுதியுள்ளார்:

**''கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்**
**களைகட் டதனொடு நேர்''**

என்னும் குறட்பாவை எடுத்தாண்டு, அவ்வாறு செய்தல், வள்ளுவர் உரைத்த அரசு அறமே, என நிலைநாட்ட முயல்வது ஏற்க கூடியதன்று எனக் கண்டித்துள்ளார். மதிப்பிற்குரிய மதிப் புரை ஆசிரியர் சமணரல்லர்; பேராசிரியர் திரு. S. V. வரதராஜ அய்யங்கார் அவர்களாவர். பெருந்தகைப் பேராசிரியர் அவர் களின் நேர்மைப் பண்பு இங்கே பளிச்சிடுகிறது. சமணச் சான்றோர்களைக் கொலையில் கொடியரென அந் நூலாசிரியர் எழுதியிருப்பது புலவர் அய்யங்கார் அவர்களால் பொறுக்க இயலவில்லை. அவர் உள்ளம் கொதித்து. அந் நூலாசிரியர் கொள்கையை ஏற்றுக் கொள்ளாது, வருந்தியுள்ளதை அவர் மதிப்புரையால் அறிகின்றோம். சமணரல்லாத அறிஞர் ஒருவர்க்கே இந்நிலை என்றால், சமணராகவே பிறந்துள்ளார்க்கு எவ்வாறிருக்கும் என்பதை வாசகர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். சமணர்கள் உள்ளம் ஆழ்கடலின் அலை போன்று அலைந்து அலைந்து அலமருமன்றோ? மதிப்புரையைப் படித்த ஜைனர் பலரும், வேதனையும், வியப்பும் அடைந்தனர். இவர் களுள், சென்னை திரு. A. J. அப்பாவு ஜெயின் அவர்கள் அந் நூலாசிரியரின் போக்கைக் கண்டித்து, அவருக்குக் கடிதம் எழுதினர். அக்கடிதத்திற்கு அந் நூலாசிரியர் எழுதிய பதிலில்

''எல்லா சமயத்திலும் கீழ்மக்கள் இருப்பார்களன்றே? அது போன்று ஜைனத்திலும் இருந்திருப்பார்கள்'' என்ற பொருள் படும்படி எழுதினுர். இப்பதில் கடிதத்திலும் அவர் வன்சொல்லே, வசைச் சொல்லேக் கையாண்டுள்ளார். இவரைப் போன்றும், இவர் சமயாச்சாரியர்கள் போன்றும் பிற சமயத்தவரைத் தூற்றும் இழி தன்மை எங்கள் பால் காணவியலாது. பிறரை வன்சொற்களால் வசைபாடும் இழி செயல்களேப் பண்டைய கால முதலே எங்கள் சமயச் சான்றேர்கள் நெஞ்சிலும் நினேயாப் பண்பினேப் பூண்டு வந்தார்கள். இவ்வுண்மையை ஜைன அறவோர்கள் இயற்றியுள்ள இலக்கியங்களேயும், நீதி நூல்களேயும், படித்தறிந்த புலவர்கள் நன்கறிவர். தேனினுமினிய அமுத மொழியாம் நம் அருந்தமிழ் மொழியில் முதன் முதல் வன்சொற்களேயும், வசைச் சொற்களேயும், பழிச்சொற்களேயும் புகுத்தி, நூல்களியற்றி மக்கள் பண்பாட்டை அழித்தவர்கள் மேற்கண்ட ஆய்வாளரின் சமய முன்ஞேர்களேயாவர். தேவாரம், பெரியபுராணம், திருவிளேயாடற் புராணம் போன்ற நூல்களில் இவ்வுண்மையைக் காணலாம். அம்மரபு வழித் தோன்றியவ ராகையால், அவ் ஆய்வாளர், கொல்லா நெறியில் தோய்ந்து வளர்ந்துள்ள சமண சமயச் சான்றேர்களேக் கொலேயிற் கொடி யாரென எழுதியிருப்பது வியப்பல்ல! அவர் ஆய்வு நூலில் வரும் எல்லாக் கூற்றுக்களுக்கும், இந்நூலில் விடை காணலாம். திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் கதைகளுக்கு அகச் சான்றே, புறச்சான்றே கிடையா என்ற உண்மைகளும் இந் நூலில் ஆதாரங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. இக்கதைகளில் எது உண்மை, எது பொய் என்பதைப் பலரும் ஆய்ந்து தெளி வதற்கே இந் நூலே மறுபதிப்பாக வெளியிட்டுள்ளோம்.

இனி, கொலேயிற் கொடியவர் யார் என்பதையும் ஆராய்ந்து பார்ப்போம். மேற்கண்ட ஆய்வு நூலாசிரியர் சமணசமயச் சான்றேர்களேக் கொலேயிற் கொடியாரென எத்தகைய ஆதாரமு மின்றி அபாண்டமாகப் பழி சுமத்தியுள்ளதைப் போன்று யாம் பழி கூறமாட்டோம். அது எம் பண்பாடல்ல. கொலேயிற் கொடியார் யார் என்பதைத் தக்க ஆதாரங்களுடன் படம் பிடித்துக் காட்டுகின்றேம். எண்ணிக் கொள்ளுங்கள்:

1. பெரிய புராணமும், திருவிளேயாடற் புராணமும் எண்ணுயிரம் சமண முனிவர்களேக் கழுவேற்றிக் கொன்ற தாகப் பறைசாற்றுகின்றன.
2. சிறுத்தொண்டர் தன் மகனேயே கொன்று சமைத்தவர்.
3. எறிபத்தர் யானேயையும், அதன் பாகனேயும் கொன்றவர்.

4. கோயில் அர்ச்சகன் ஒருவன் கழற்சிங்க பக்தரின் மனைவி யின் மூக்கை அறுத்தான்.

5. கழற்சிங்கர் தன் மனைவியின் மூக்கை மட்டும் அறுத்தது போதாதென, அவள் கையையும் வெட்டியவர்.

6. கோட்புலி என்ற பக்தர் தன் குடும்பத்தார் அனைவரை யும் கொன்று குவித்தவர்.

7. சண்டேசர் தன் தந்தையின் காலை வெட்டித் துண்டாக் கியவர்.

8. இயற்பகை நாயனுர், தன் மனைவியைக் காதலித்த சிவனடியாருடன் மனைவியை அனுப்பி வைத்தபோது, இயற்பகையாரின் சுற்றத்தார் தடுத்து நிறுத்தியதற் காக, அவர்கள் அனைவரையும் கொன்று, மனைவியை அடியாருடன் அனுப்பியவர்.

9. கலிக்கம்பர் என்ற பக்தர் தன் மனைவியின் கையை வெட்டியவர்.

ஐயகோ! மனிதாபிமானம் சிறிதுமின்றி, பக்தியின் பெயரால் இத்தகு படுகொலைகளைப் புரிந்தவர்களைப் படம் பிடித்துக் காட்டு கின்றது பெரிய புராணம்! அபாயகரமான இப்படுகொலைப் புராணத்தைக் கையிலேந்திய அந் நூலாசிரியர், அஹிம்சையைக் கடைப்பிடித்து, அறிவொளி பரப்பிய தூய சமணசமயச் சான்றோர்களைக் கொலையிற் கொடியாரெனக் கை நடுங்காமல், உள்ளம் கூசாமல் எழுதியிருக்கும் செயலைக் கண்டு உலகமே நகைக்கும். நேரிய புலவர்களின் நெஞ்சம் பதரும்! வரலாற்றுத் துறை அறிஞர்கள் வெட்கித் தலைகுனிவர். இதற்கெடுத்துக் காட்டாக அறிஞர் S. V. வரதராஜ அய்யங்கார் அவர்கள் எழுதிய மதிப்புரையே சான்றுகும்!

ஆதிகாலந் தொடங்கிச் சமணசமய சான்றோர்கள், தமிழ் மொழியாம் பெண்ணரசியை அறிவியல் பளிச்சிடும் வெண்பட் டாடை உடுத்தி, எழில் உண்டாக்கி, அருளறம் முதலிய அறநெறி களை அணிகலன்களாக அணிவித்து, இன்சொலாலாய மலர் மாலை களால் அலங்கரித்துள்ள அரிய காட்சியையும், உலகோர்ப் போற்றிப் புகழாரம் சூட்டும் வகையில் அரும்பெரும் இலக்கியங் களையும், இலக்கணங்களையும், நீதி நூல்களையும், நிகண்டுகளையும் இயற்றி தமிழ்த் தாயின் பெருமையையும், சிறப்பையும் ஒளிவிட்டு வீசுமாறு செய்த அரும்பெருஞ் சேவைகளையும் கண்டு, உள்ளம் புழுங்கிப், பொறுமைச் சூழலில் சிக்கி நிலைகுலைந்ததால் ஆய்வு நூலாசிரியர் சமணசமயத்தைப் பழிதூற்ற ஆரம்பித்துள்ளார்.

"உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ்"

என்பது குறளறம் அன்றோ?

இந்த இருபதாம் நூற்றுண்டு சுமுகமான சுதந்திர காலம். ஜைனர், பௌத்தர், சைவர், வைணவர், கிறித்தவர், இஸ்லாமியர் ஆகிய பலரும் எவ்வித வேற்றுமையுமின்றி உடன் பிறந்தார் போன்று ஒருவரோடொருவர் கலந்தும் பழகியும் அளவளாவி வரும் பொற்காலம். சமயக் காழ்ப்பிற்குச் சமாதி எழுப்பி, அந்தந்தச் சமய சார்பான விழாக்களிலும், கூட்டங்களிலும், ஆர்வத்தோடு, பாச உணர்வோடு கலந்துகொள்ளும் காட்சியை இன்றும் காண்கிறோம். இத்தகு சமரசம் நிறைந்த காலத்தில் வகுப்பு வாதத் தீயை மூட்டி, அமைதியைக் குலைக்க முயல்வது வருந்தத்தக்கச் செயலாகும். ஏன், இக்காலச் சட்டப்படி, இது குற்றமுமாகும். இச்சீரிய சட்டத்தின் கீழ் வகுப்புவாத இசைத் தட்டு, திரைப்படம், நாடகம் போன்ற பலவற்றைத் தடை செய்தும், பறிமுதல் செய்தும் வெற்றி கண்டுள்ளோம் என்பதைத் தமிழகம் நன்கறியும். எனவே மேற்கண்ட நூலாசிரியர் சமண சான்றோர்களைக் கொலையிற் கொடியாரென எழுதியதற்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டு, இனியேனும் சமயக் காழ்ப்பை அறவே அகற்றித் தம் பெரியபுராண ஆய்வு நூலின் மறுபதிப்பில் மேற்கண்ட வன்சொற்களையும், பழிதூற்றலையும் நீக்கி வெளியிடுவாரென நம்புகிறோம். இந்த ஆலோசனையை, மேற்கண்ட ஆய்வு நூலாசிரியர் கடைப்பிடித்தாராயின் அவருக்கு நன்மதிப்பும், நற்பெயரும் வந்தடையும்!

மேற்கண்ட திருஞான சம்பந்தர் ஆய்வு நூலாசிரியர் புலவர் மறை திருநாவுக்கரசு அவர்களுக்கு மறுப்பு நூல் வெளியிட விரும்பிய யான், தமிழக ஜைனப் பெருமக்களால் ஜைன சமயக் காவலரெனப் போற்றப் படுபவரும், வடஇந்திய ஜைனப் பெருமக்களால் 'தற்கால அகளங்கர்' என்ற புகழாரம் சூட்டப் பட்டவரும் சமாஜ ரத்ன என்ற விருதும், பாரத சர்க்காரால் 'பிரணிமித்ரா' என்ற விருதும் பெற்றவருமான ஜீவபந்து உயர் திரு. டி. எஸ். ஸ்ரீபால் அவர்களை அணுகி என் கருத்தை வெளியிட்டேன். அவரும் என் உணர்ச்சியைப் பெரிதும் பாராட்டி 'அப்பர் சம்பந்தர் ஆவி உலகப் பேச்சு' எனும் அச்சிட்ட வெளியீட்டை என்னிடம் அளித்து இதனையே மறுப்பு நூலாக வெளியிடுமாறு பணித்தார்கள். அப் பெருந்தகைக்கு என் நன்றி கலந்த வணக்கத்தைச் செலுத்துகின்றேன். இந் நூலை அச்சிட்டு வெளியிடப் பொருளுதவி புரிந்த பெரியோர்கள் அனைவர்க்கும், என் அன்பு கலந்த நன்றி உரித்தாகுக! இந் நூலை இவ்வளவு அழகாக அச்சிட்டு உதவிய எஸ். தன்யகுமார் அச்சக உரிமையாளருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ் ஆய்வுநூலை வெளியிட என்னை ஊக்குவித்தவரும் என் அன்புக்கும் பெருமைக்குரியவருமாகிய உயர்திரு V. N. பொன்னுசாமி நயினர் அவர்கட்கு என் நன்றியும் வணக்கமும் உரித்தாகுக.

அன்னமங்கலம்,
20—5—1978

அன்பன்,
(ஒப்பம்) A. சந்திரநாத்

திருநாவுக்கரசர், சம்பந்தரின்

# ஆவி உலகப் பேச்சு

## திருநாவுக்கரசர் ஆவி பேசுகிறது

தமிழகத்தில் சில சபையார் எங்கள் கதையெனக் கூறி நாடக மாக நடித்ததை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இக்கதைகள் பெரிய புராணக்காரர் கற்பனையாக எழுதியனவேயன்றி உண்மை யல்ல. இப்பொழுது திருநாவுக்கரசு என்ற இயற்பெயரையுடைய யான் பேசுகின்றேன் :

நான் பாடிய தேவாரப் பாக்களில், திருப்பாதிரிப்புலியூர் (பாடலிபுரம்) ஜைன மடத்தில் நான் கல்வி கற்றதாக ஒருவரிகூட கூறவில்லை. அங்கிருந்து வெளியேறி ஜைன சமயத்தைப் பழித்த தாகக் கூறும் அபாண்டச் செய்தி எனது கௌரவத்தைக் குறைத்து நன்றி கெட்டவனாகச் செய்து விட்டது அப்புராணம்! என்னைக் கல்லில் கட்டி கடலில் விட்டதாகவும், சுண்ணாம்புக் கால்வாயில் தள்ளியதாகவும், யானைக் காலில் இடறவிட்டதாகவும், நான் எந்த மன்னன் பேரிலும் குற்றஞ்சாட்டவில்லை. இவைகள் யாவும் புராணக்காரரின் பொய் மூட்டைகள். நமச்சிவாய மந்திரத்தின் மகிமையைப்பற்றி பதினொரு பாடல்கள் பாடியிருக்கிறேன். அவை களில் 'சொற்றுணை' என்ற பாடலைத் தனது கற்பனைக்கு எடுத் தாண்டுள்ளார் சேக்கிழார். அப்பாடலில் என்னைப் பிறர் கல்லோடு பிணைத்துக் கடலில் விட்டார்கள் என்பது போன்ற செய்திகளைக் கூறியிருக்கின்றேனா? அவ்வாறு செய்தவர் சமணர் என்றாகிலும் குறிப்பிட்டிருக்கின்றேனா? இல்லை! இல்லை! எனது தேவாரத்தில் காணும் பாக்கள் பக்திப் பாடல்கள். சைவ சமயத்தையும், சிவபெரு மானையும் உயர்வாகப் பாடி ஜைன பௌத்த சமயங்களைத் தாக்கி யுள்ளேனேயன்றி வேறல்ல. அவ்வாறே 'மாசில் வீணையும்' என்ற பாட்டும், 'சுண்ணவெண் சந்தனம்' என்ற பாட்டிலும் சமணர்கள்

எனக் குறிப்பிட்டிருக்கின்றேனா? இல்லை! என்னை யானைக் காலில் இடறவிட்டபோது, அந்த யானை மக்கள் கூட்டத்திலே சமணர்களைத் தேடி ஓடி அழித்ததாம்! பகுத்தறிவுவாதி நம்புவானா, இப்போலிக் கதையை? அவைகளை என் வாழ்க்கையில் சேர்த்துக் கதை கட்டி யிருக்கின்றார் சேக்கிழார். எனது பாக்களில் இப்புராணக் கதைக்கு அகச்சான்றே கிடையாது. இவைகளை நன்கு ஆராயாது புராணப் புளுகை அடிப்படையாகக் கொண்டு எனது வாழ்க்கையை நன்றி கெட்ட வாழ்கையாகக் காட்டுவதும், நடிப்பதும் அறியாமை என்பேன். நான் மகேந்திர பல்லவன் காலத்தில் வாழ்ந்தவனல்லன். அப்பேரரசனை மதம் மாற்றம் செய்ததாக நான் தேவாரத்தில் பாடவுமில்லை.

## வாரப் பாடல் வரலாறு

இங்கே ஒரு வரலாற்றைக் கேளுங்கள். இது இலக்கியங் கூறும் உண்மை. பண்டைய காலத்தில், அதாவது எங்களுக்கு முன்னரே, தமிழிலக்கியங்களில் தேவாரம் என்ற சொற்றொடர் நிலவி வந்துள்ளது, சிலப்பதிகாரத்தில், ''வாரம் பாடும் தோரிய மடந்தை'' எனக் கூறப்பட்டுள்ளது. இவ்வரிக்கு அடியார்க்கு நல்லார் உரை எழுதுகையில் 'வாரப் பாடல், சொல்லொழுக்கம், இசை ஒழுக்கம் உடையது' என விளக்கியுள்ளார். இதனால் வாரப் பாடல் என்பது இறைவனைப் போற்றிப் பாடும் வழிபாட்டுப் பாடல் அல்லது துதிப்பாடலைக் குறிக்கும். இத்தகு துதிப்பாடல்களைத் தெய்வத்தின் முன் பாடுவதால் அப்பாடல்களைத் தேவாரம் என வழங்கினர். பிரித்துக் கூறுகிறேன் கவனியுங்கள். தே+வாரம்= தேவாரம் என்ற சொல்லாட்சி வழங்கி வந்தது. இன்றும் மலையாளத்தில் இறைவழி பாட்டை தேவாரம் என வழங்குகின்றனர். தேவாரம் என்ற இப்புனிதச் சொற்றொடர் தெய்வ வழிபாட்டை யுடைய எல்லா சமயத்தாருக்கும் பொது சொல்லேயாகும். இச்சொல் கி. பி. 14ஆம் நூற்றாண்டு வரை பொதுவாகவே வழங்கி வந்தது. நாங்கள் எங்கள் துதிப்பாடல்களுக்குத் திருமுறைப் பாடல் எனப் பெயரிட்டுப் பாடியும், பாடவைத்தும் வந்தோம். எங்கள் காலம் கி.பி. 10ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. இக்கால முதல் 14ஆம் நூற்றாண்டு வரை எங்கள் பாக்களுக்குத் தேவாரம் என வழங்கி வந்ததாக இலக்கியச் சான்றுகளோ, கல்வெட்டுச் சான்றுகளோ கிடையா. இவ் உண்மையை எப்புலவரும் மறுக்க முடியாது. இது என் சவால்! கி.பி. 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவப் புலவர்கள் எங்கள் பாக்களுக்குத் தேவாரம் எனப் பெயர் சூட்டி வழி வழி கொண்டு வந்துவிட்டார்கள். இவ்வாறு முதன்முதல் பெயர் சூட்டியவர் இரட்டையர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

## கல்வெட்டுச் செய்தியும் கற்பனைக் கூற்றும்

எங்கள் காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டு என முன்னரே கூறியுள்ளேன். இக்காலச் சைவப் புலவர்கள் எங்களைக் கி.பி. ஏழாம் நூற்றாண்டினராக மாற்றிக்கூறும் போலிக் கூற்றையும் வெளிப்படுத்தி விடுகின்றேன்.

திருவல்லம் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுச் செய்திகள் ஒன்றில்,

> *''விஜயநந்தி விக்கிரமனாகிய*
> *நந்தி வர்ம பல்லவ மல்லன்*
> *து 17ம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 780)*
> *திருப்பள்ளித் தாமம் பறிப்பார்க்கும்*
> *திருப்பதிகம் பாடு வாருள்ளிட்ட*
> *பல பணி செய்வார்க்கும்,*
> *நெல்லு நானூற்றுக் காடியும்''*

எனக் குறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுச் செய்தியை எங்களோடு பிணைத்துக் கூறும் கற்பனையைக் கேளுங்கள். பன்னிரு திருமுறை வரலாறு எழுதியவர், ''கி.பி. எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி யிலேயே தேவாரப் பதிகங்கள் திருக்கோயில்களிற் பாடப் பெற்று வந்த செய்தி நன்கு புலனாகிறது.'' என இக் கல்வெட்டைச் சுட்டி எழுதியுள்ளார். இக் கல்வெட்டின் உண்மைச் செய்தியை மறைத்துப் போலிச் செய்தியை வைத்தே எங்கள் காலம் ஏழாம் நூற்றாண்டெனப் பறைசாற்றி வருகின்றனர். மேலே கூறிய கல் வெட்டில், ''திருப்பதிகம்'' எனப் பொறிக்கப்பட்டுள்ளதேயன்றி, தேவாரப் பதிகம் எனக் குறிப்பிட்டில்லை! பதிகம் என்ற சொல் வாரம் என்ற சொல்லைப் போன்றே பல சமயத்தாரின் பாடல்களுக்குப் பொதுச் சொல்லாகும். அனைத்துச் சமயத் தாரும் தங்கள் தங்கள் துதிப் பாடல்களைப் பதிகம் என்றே அழைத்துவரும் இலக்கிய சான்றுகளைக் காணலாம். இவ் இலக்கிய உண்மைகளை மறைத்து கல்வெட்டில் காணும் பதிகம் என்பதை தேவாரப் பதிகம் என வலிந்து கூறி அறிவு உலகத் தையே மயக்கி வருகின்றனர். அக்கோயிலைத் திருப்பள்ளி எனக் குறித்து இருப்பதால் அக்கோயில் ஜைனக் கோயிலாக இருந் திருக்க வேண்டும். பிற்காலத்தில் இச் சமணர் கோயிலை சிவன் கோயிலாக மாற்றியிருக்க வேண்டும். இதுபோன்று பல ஜைனக் கோயில்களைச் சைவக் கோயில்களாக மாற்றப் பட்டிருப்பது எங் களுக்கு நன்றாகத் தெரியும். இவ்வாறு சைவக் கோயிலாக மாறி விடவே இக்காலத்தவர் அக்கல்வெட்டுச் செய்தியைத் தங்கள் சார் பாக புரட்டிக் கூறுகிறார்கள்.

உங்கள் உள்ளங்களை வியப்பில் ஆழ்த்தும் மற்றொரு செய்தியைக் கூறுகிறேன். தேவாரம் என்ற தெய்வ வழிபாட்டின் பொதுப் பெயரை எங்கள் திருமுறைப் பதிகங்களுக்கு எவ்வாறு சூட்டிக் கொண்டார்களோ, அவ்வாறே திருநறுங்கொண்டை அருகரைப் போற்றும் அப்பர் என்ற பெயரை பிற்காலத்தில் எனக்குச் சூட்டி விட்டனர். யான் உயிரோடு வாழ்ந்த காலம் வரை என்னை அப்பர் என யாரும் அழைக்கவேயில்லை! அப்பெயரை எனக்கு என் வாழ் நாள் வரை வழங்கியதுமில்லை என்பதை உறுதியாகக் கூறுகின் றேன். இந்தக் குழப்பத்தினால்தான், நீங்கள் ஆவி உலகை நோக்கி' 'அப்பரே, வருக! வருக'வென அழைத்தபோது, இங்குள்ள எந்த ஆவிக்கும் அப்பெயர் இல்லாததால் உங்களுக்குத் தொடர்பு கிடைக்கவில்லை. பின்னர் நீங்கள் 'திருநாவுக்கரசரே, வருக' என அழைக்கவே நான் பேச முற்பட்டேன். இவ்வாறெல்லாம் புராணக் காரர்கள் உலகை மருள வைத்துள்ளனர் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். எனவே, இவ்வரலாற்றுச் செய்தியை நன்கு ஆராய்ந்து ஏற்று, புராணப் பொய்க் கூற்றுக்களை அறவே அகற்றி, உண்மையைக் கடை பிடியுங்கள். ஒரு ஆங்கிலேயே அறிஞர் கூறுகிறார்: ''எதையும் நன்கு ஆராயாதவன் அறிவிலியா வான்; ஆராய மனமில்லாதவன் கண்மூடியாவான். ஆராயத் துணியாதவன் அடி முட்டாளாவான்.'' இவ் அரிய அறிவுரையை மேற்கொண்டு உண்மை காணுங்கள்! இனி சம்பந்தர் பேசுவார்!

## சம்பந்தர் ஆவி பேசுகிறது

எனது நண்பர் திருநாவுக்கரசர் கூறியது போன்றவைதாம் எனது செய்திகளும். முதலில் பெரியபுராணக்காரரின் அண்டப் புளு கின் அடிப்படையை நீங்கள் அறிந்து கொள்ளவில்லை. எனது கதையை முதன் முதலில் உலகுக்கு அறிவித்தது கல்லுப் பிள்ளையா ராம்! போதுமா? பொய் மூட்டையே என்பதற்கு முதல் சான்று இது! கல்லுப் பிள்ளையார் கூறிக் கொண்டே வரும்போது நம்பி யாண்டார் நம்பி சுருக்கெழுத்து எடுத்து பதிவு செய்து கொண்டா ராம்! இது இரண்டாவது பொய் மூட்டை! யான் பிராமண குடும்பத் தில் பிறந்தவன்! என் தந்தை வேதவேள்வியாகிய கொலை வேள்வி புரிபவர். இந்த வேத வேள்வியை எதிர்த்த ஜைன, பௌத்தர்கள் பால் எனக்குப் பகைமை யுண்டாயிற்று. அப்பகையின் காரணமாக ஜைன, பௌத்தர்களைப் பழித்து, தேவாரம் பாடினேன். இப்பழியை வேதவேள்வி சார்பாகப் பாடினால் யாரும் விரும் பவே மாட்டார்கள். என்னையும், என் இனத்தாரையும் தமிழர்கள் ஒரு முகமாக எதிர்ப்பார்கள், ஆகவே சைவ சமயத்தையும், சிவபெரு

மாலையும் பாடுவதாகச் சூழ்ச்சி செய்து, தேவாரம் பாடினேன். எனது தேவாரப் பாக்களிலே 'வேதவேள்வியை நிந்தனை செய்த வர்கள்' என்பது போன்ற பாக்களைப் படித்தால் உண்மை விளங் கும். அவைகளில் சைவ சமயத்தை எதிர்த்தார்கள் என்று எங்கும் கூறவில்லை. வேதவேள்வியை நிலைநாட்டுவதே என் குறிக் கோள். சிவபெருமானையே காபாலிக உருக்கொடுத்து பாழாக்கியுள்ளேன். இவ்வாறு காபாலிகக் காளாமுகக் கூட்டத்தாரையும், பாமரத் தமிழர்களில் சிலரையும் என் பக்கம் திருப்பவே இந்தச் சூழ்ச்சி செய் தேன். என் வஞ்சக வலையில் அகப்பட்டவர் ஒரு தமிழர்! என் ஆப்த நண்பர் திருநாவுக்கரசரே! பின்னர் பல தமிழர்கள் எங்களைப் பற்றிப் புராணம் பாடினர். என் வாழ்க்கைச் சரிதமாகப் பாடிய புராணங்கள் யாவும் பொய்யை அடிப்படையாகக் கொண்டவை. பகுத்தறிவற்றவர்கள் பலர் இருக்கின்றார்கள் என்பதை அறிந்தே சேக்கிழார் எனது வாழ்க்கைச் சரிதமெனப் புராணம் பாடியுள்ளார். அப்பொய் மூட்டைகளை ஒவ்வொன்றாகக் கூறுகிறேன்.

## ஞானப்பால்

நான் குழவிப் பருவத்தில் குளத்தங்கரையில் அழுது கொண் டிருந்தேனும்! பார்வதி தனது முலைப்பாலைக் கொடுத்தாளாம்! அடா! பாமர உலகமே! இக்கூற்றை நம்பித்தான் ஞானப்பால் நாடகமா? எனது தேவாரப் பாக்களில் வரும் இன்னுச் சொற் களாகிய வசை மொழிகளை ஆழ்ந்தறிந்தால் இவைகள் ஞானப் பாலில் உதித்தவையல்ல; யாகப் பாலாகிய சோமபானத்தால் உதித்த சொற்கள் என்பது சொல்லாமலே விளங்கும்.

## சோம பானமும் கற்பழித்தலும்

சோமபானம் கள்ளைப் போன்ற ஒருவித குடி வகை. அதை அருந்தினுல் எனக்குப் பாடல்கள் வரும். அவ்வழியில் வந்தவை தான் நான் பாடிய தேவாரப் பாடல்கள். என்ன பாடுகிறேம் என்ற உணர்வே தோன்றுது. அதனுற்றுன் என் தேவாரப் பாடல் களின் கருத்துக்கள் முன்னுக்குப் பின் முரணுகக் காணப்படுகின்றன. நல்லவைகளும் இருக்கும். தீயவைகளும் இருக்கும். அந்தச் சூழ்நிலை யில் ஓரிடத்தில்,

*" மண்ணகத்திலும் ................................................*

*..............................................................................*

*பெண்ணகத்தெழிற் சாக்கிய பேயமண்*

*தெண்ணற் கற்பழிக்கத் திருவுள்ளமே."*

என பௌத்தப் பெண்களையும், சமணப் பெண்களையும் கற்பழிக்கத் திருவுள்ளம் எனச் சிவபெருமானை வேண்டிப் பாடிவிட்டேன்,

அவ்வளவுதான்! சைவ சமயத்தின் உட்சமயங்களாகிய காபாலி கரும், காளாமுகரும் இப்பாடலை வீதி வீதியாகப் பாட ஆரம்பித்து விட்டார்கள். சமணர்கள் நடு நடுங்கி விட்டார்கள். அவர்கள் பெண்கள் வெளியில் தலை காட்டுவதேயில்லை!

## எதிர்ப்பு

இதனல் தமிழகத்தில் ஒரு பெருங்கிளர்ச்சியே தோன்றிவிட்டது. சைவ வைணவத் தமிழர்களும் என்னைக் கண்டிக்க ஆரம்பித்து விட்டார்கள். பாடியவன் பிராமணன். இவன் தமிழ்ப் பெண் களைக் கற்பழிக்கவே பாடியுள்ளான். ஒரு நல்ல தமிழன் இவ்வாறு பாடுவாஞ? சமண பௌத்தப் பெண்களாயிருந்தாலென்ன? நமது சமயப் பெண்களாயிருந்தாலென்ன? நாம் எல்லோரும் தமிழினம் தானே? அவர்களும் தமிழ்ப் பெண்கள்தாமே! ஆகவே நாம் எல்லோரும் சேர்ந்து பிராமணர்களைக் கண்டிக்கவேண்டும் என ஆங்காங்குக் கூடி கூடிப் பேசலாஞர்கள். இந்தப் பேராபத்தை அறிந்த என் தந்தையும், மற்ற பிராமணர்களும் என் தேவாரப் பாக்களையும், திருநாவுக்கரசர் தேவாரப் பாக்களையும் பிடுங்கி, தில்லையில் ஒரு அந்தணர் வீட்டில் மறைவான அறையில் புதைத்து பூட்டிவிட்டார்கள். உடனே தமிழர்களிடம் வந்து எல்லா பாடல் களையும் தீயிலிட்டுக் கொளுத்திவிட்டதாகவும், எங்கள் இனத்தை மன்னிக்க வேண்டுமெனவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்கள். அதன் பின்னர் அமைதி ஏற்பட்டு நாளாவட்டத்தில் தமிழர்கள் கோபமும் அடங்கிவிட்டது. இச் சூழ்நிலைக்குப் பின்னர், அத் தேவாரப் பாக்களில் சிலவற்றை வெளியே கொண்டுவந்து ஆங்காங்குப் பாடவைத்தோம். இது எங்கள் காலத்திலேயே நடந்தது. அதாவது கி.பி. 10ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி.

## இராஜ ராஜ சோழன்

இதற்குப்பின் இராஜ் ராஜ சோழன் ஆட்சி செலுத்திஞன். இம் மன்னன் திருப்பதியப்பாக்களைக் கோயில்களில் முறையாக ஓதுதற்கு 48 பேரை நியமித்தான். இச் செய்தியை அவன் கல்வெட்டில் பொறித்து வைத்தான். இவை தேவாரப் பாக்கள் அல்ல! ஏதோ திருப்பதியப் பாக்கள்! அதாவது தோத்திரப் பாக்கள்! இந்த வர லாற்றைத் திரித்து ஒரு புலவர் திருமுறைக் கண்ட புராணம் என ஒரு பொய்ப் புராணம் இயற்றிஞர். அந்தப் புராணத்தில்தான் புதைந்து கிடந்த தேவாரப் பாக்களை இராஜ ராஜ சோழன் கண் டெடுத்துப் பரப்பிஞர் எனக் கதைக்கட்டிப் புராணம் பாடிவைத் தார். இந்த அபத்த புராணத்தை உண்மையென நம்பியே இன் றுள்ளவர்கள் படித்தும், பேசியும், நாடகமாக நடத்தியும் பெருமை

யடித்துக்கொள்கின்றூர்கள். இப் புராணக் கூற்று பொய்யே என்ப தற்கு இராஜ ராஜ சோழனின் கல்வெட்டுச் செய்திகளே சான்ருகும். இங்கே கவனமாகக் கேளுங்கள்! ஆவி உலகப் பேச்சு மறுமுறை கூறவியலாது. பேசிக்கொண்டே போகத்தான் முடியும்! ஆதலால் உங்கள் காதுகள் என் பேச்சில் தொடர்புகொண்டே இருக்கட்டும்! இராஜ ராஜ சோழன் 'திருப்பதியங்களை ஓதுவதற்கு 48 பேர்களை நியமித்துள்ளேன்' எனப் பொறித்துள்ளானேயன்றி இவை தேவார மென்றே, இத் தேவாரப் பாக்களைத் தான் கண்டெடுத்ததாகவோ அக் கல்வெட்டில் பொறிக்கவேயில்லை! கண்டெடுத்தது உண்மை யாயின் இச்செய்தியைப் பொறிக்காமலிருப்பானு? அவன் வாழ்க்கை வரலாற்றில் புகழையும், பெருமையையும் தரத்தக்க சிறப்புச் செயலல்லவா இது! தேவாரப் பாக்களை ஓதிவருமாறு பணித்ததை விட கண்டெடுத்தச் செய்திக்கு உயிரினும் மேலான இப் புனிதச் செயலுக்கன்றே முதலிடம் கொடுத்துப் பொறித்திருப்பான். எனவே இராஜ ராஜ சோழன் கண்டெடுத்தான் என்ற புராணக் கூற்று வெறுங் கற்பனையே யாகும். பிற்கால சைவப் புலவர்கள், எங்களுக்கு ஏற்றமளிக்கவேண்டி இவ்வாறெல்லாம் புராணங்களைப் பாடிவைத்து மக்களையும் மயங்க வைத்துள்ளார்கள் என்பதை வெளிப்படுத்தாமல் மறைக்க முடியவில்லை.

## ஆவி உலகப் பண்பு

பூவுலக மக்களைப் போன்று ஆவி உலக உயிர்கள் பொய்யும், புனைசுருட்டும், வஞ்சனையும் கொண்டவையல்ல! எது உண்மையோ அதைத்தான் பேசும் இயல்புடையவை! யாங்கள் பூவுலக வாழ்க்கை யில் இருந்தபோது பாடிவைத்தவைகளையும், இன்று பேசும் எங்கள் உரைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால், ஆவி உலகப் பண்பும், நேர்மையும் கண்ணுடி போல் விளங்கும். எங்கள் உரையில் யாங்கள் புரிந்த குற்றங்களும் ஒளிவு மறைவு இன்றி ஓடிவரு கின்றனவே; நல்ல வேளையாக நீங்கள் ஆவி உலகோடு தொடர்பு கொண்டீர்கள். பல உண்மைகள் வெளியாயின. புராணப் புரட்டுகள் புற்றீசல்போல் அம்பலமாயின! எங்கள் பேரில் சுமத்தி யுள்ள பழிகளும் நீங்கின! எங்களை நாடகப் பாத்திரங்களாக அமைத்து, நாடகம் நடத்திய நாடகக் குழுவினருக்கு இந் நிகழ்ச்சி நல்ல பாடமும், வெட்கமும், தெளிவும் ஏற்படுத்தும் என்பதில் ஐய மில்லை! இனி மேலே செல்வோம்!

இவ் வகுப்புவாதப் பாடல்களாகிய தேவாரப் பாடல்களைத்தான் தெய்வீகப் பாடல்களெனக் கோயில்களிலும், சமயக்கூட்டங்களிலும் ஏன் வானெலியிலும் பாடி மகிழ்கின்றூர்கள். இக்கால தமிழர்களுக்கு அக்கால வரலாறு தெரியாது. அவ் வரலாற்றை மறைக்கவே

தேவாரப் புதையல் கிடைத்ததென திசைமாற்றி திருப்பிவிட்டார்கள் பிராமணர்கள்! இந்தச் சூழ்ச்சியை அறியாத தமிழர்கள் ஏமாந் தார்கள்! எனவே தமிழர்கள் பாடுகிருர்கள்! பிராமண சங்கங்கள் நாடகம் நடத்திப் பாடுகிருர்கள்.

## பரிசளிப்புப் புரட்டு

எனக்குச் சிவபெருமான் பல்லக்கு முதலிய விருதுகளைப் பரிசாக அளித்தாராம்! இப்படி ஒரு கடவுள் உலகில் தோன்றி ஒரு மனித னுக்குப் பரிசளிக்குமா என்பதை ஆராயும் அறிவு இல்லாத உலகில் தான் இக்கதை இடம்பெறும்.

## கொள்ளிவைத்த கற்பனை

சமணர்கள் என் மடத்தில் கொள்ளி வைத்தார்களாம்! ஐயோ பாவம்! அவர்கள் அத்தீய செயலைச் செய்யவே இல்லை. அவ்வாறு யான் அவர்கள் பேரில் குற்றம் சுமத்தவும் இல்லை. 'சமணர் கொளுவுஞ்சுடர் பாண்டியர்க்காகவே' எனப் பாடியிருப்பதைச் சேக் கிழார் தமது பொய்க் கதைக்கு ஆதாரமாக்கிக் கொண்டார். எனக்குச் சமணர்கள் பேரில் ஏற்பட்ட வயிற்றெரிச்சலையே 'அமணரிட்ட தீ' எனப்பாடி அவர்களை ஆதரிக்கும் பாண்டியனுக்கு இவ்வயிற்றெரிச்சல் உண்டாகட்டும் என்ற பொருளில் பாட்டுக்கள் பாடியுள்ளேன். இவைகளில் மடத்திலிட்ட தீ எனக் குறித்திருக் கின்றேனு என்பதை இம்மூட உலகம் அறியாது சேக்கிழாரின் பொய்க்கூற்றை நம்பிப் பகுத்தறிவை இழந்து வருகிறது. ஞானப் பால் நாடகத்தில் என் மடத்தில் சமணர்கள் கொள்ளி வைப்பது போன்ற காட்சியைக் காட்டிய போது யான் வியப்பும் வேதனையும் அடைந்தேன்.

## சொற்போரின் தன்மை

வாதத்தைப் பற்றியும், சேக்கிழார் கூற்று அவர் அறிவையே பரிசோதித்திருக்கிறது. வாதம் என்ருல் சொற்போர் தர்க்கம் என்று பெயர். யான் வாதம் செய்யத் திருவுள்ளமே எனப் பாடி விட்டது உண்மையே! இந்தச் சொற்போரை நிகழ்த்த சமணர்கள் தயாராஞர்கள். அது சமயம் யான் போலியாக மேற்கொண்டுள்ள சைவ சமயத்திற்குத் தர்க்க சாஸ்திரமே கிடையாது. தத்துவங்காணு சமயத்தைக் கொண்டு யான் சொற்போர் நிகழ்த்துவது எங்ஙனம் இயலும்? எனக்கும் சொற்போர் பயிற்சி கிடையாது. ஆகவே, ''சாவாயும் வாது செய் சமணரின் ஆற்றலை அறிந்து ''ஏதுக் களாலும், எடுத்த மொழியாலும் சோதிக்க வேண்டா'' எனப் பாடி அறிவுக்குத் தடைசெய்து, வாதமின்றித் தப்பித்துக் கொண்டேன்,

இந்த உண்மையை மறைத்து, சேக்கிழார் வாதம் நடந்ததாகவும், நீரில் நெருப்பில் ஏடுவிட்டு வாதம் புரிந்ததாகக் குறித்துள்ளார். வாதம் என்பது சொற்போர் நிகழ்ச்சி என்பதைச் சிறிதும் உணராதவர் போலும் சேக்கிழார்! சொற்போரை அறியாத சேக்கிழார் ஜாலவித்தையை வாதம் எனக் காட்டி ஜெகஜ்ஜாலம் செய்துள்ளார். சொற்போரைப் பற்றி 'சூளாமணி' என்ற சமண காவியத்தில், ''ஒன்று நன்றெ‌ன உணர்ந்து ஒருவன் கூறுமேல், அன்றெ‌ன ஒருவனுக்கு அறிவு தோன்றுமே'' என்றார். அத்துறை யன்றோ வாதம் என்பது? இந்த அறிவியல் துறையில் அறிவு பெறாதவர்களே ஜாலவித்தையை வாதம் என்பார்கள். கற்பனை யிலும் கருத்து இருக்கவேண்டும். சேக்கிழார் கற்பனைகள் பொருத்த மற்றவைகளே! இவ்வாறே பொய்யாகப் புனைந்து எனது கதை யெனப் பாடிய புராணக் கூற்று முழுமையும் அபத்தமே! இது அபத்தம் என்பதை உலகுக்கு அறிவிக்கவே, என் கதையைக் கல்லுப்பிள்ளையார் கூறியதெனக் கூறி தப்பித்துக் கொண்டார் சேக்கிழார்.

## என் அடாத செயல்

பாரத கலாசாரம் மிகமிக மேன்மையானது. ஜாதி சமய பேத மற்ற அறநெறி கொண்ட கலாசாரம். மக்களுடைய மேம்பாட்டுக்கு உதவுவது. இத்தகு அறநெறிகள் பாரத நாடு பூராவும் பரவி மக்கள் பலரும் ஒருமைப்பாட்டு உணர்வுடன் உடன் பிறந்தார் போன்று அமைதியும், இன்பமும். பண்பு நலமும் பெற்று விளங் கினர். இந்த நிலை தமிழ்நாட்டிலும் தழைத்து ஓங்கியிருந்தது. இதற்கேற்ற இலக்கியங்களும், நீதி நூல்களும் இயற்றி அறிவை யும், அன்பையும் பெருக்கியவர்கள் சமணச் சான்றோர்களே! இப் புனித இயக்கத்தை அழிக்கவே, வேதவாதிகள் கிளம்பினர். அந்த மரபில் தோன்றிய யானும் பல சூழ்ச்சிகளைக் கையாண்டு, நல்லறி வும், நல்லொழுக்கமும், அன்பு நெறியும் வளர்ந்துவந்த தமிழகத் தில் காபாலிகம், காளாமுகம், பாசுபதமாகிய வைதீக உட்சமயங் களைப் பரப்பி ஊன் உண்ணல், கள் குடித்தல், போகம் துய்த்தல், பிணங்களின் மண்டை ஓடுகளையும், எலும்புகளையும் மாலையாகத் தரித்தல், பலியிடுதல், யாகம் செய்தல் போன்றவற்றையே சமய நெறிகளாக என் தேவாரம் பூராவும் பாடி தமிழர் பண்பாட்டை மறைமுகமாக அழித்தேன் என்பதையும் வருத்தத்தோடு தெரி வித்துக் கொள்கிறேன். யான் பாண்டிய மன்னன் நெடுமாறன் காலத்தில் வாழ்ந்தவனல்லன். அம் மன்னனை மதமாற்றம் செய்த தாக என் பாக்களில் பாடவுமில்லை.

எங்கள் காலத்தில் எண்ணாயிரம் சமண முனிவர்களைக் கழு வேற்றிக் கொன்றதாகக் கூறும் கூற்றும் அபாண்டமே. அக்கால

சூழ்நிலையில் அவ்வாறு கழுவேற்றம் நடந்திருந்தால், யாங்கள் எங்கள் பாக்களில் அதை வெற்றிச் செய்தியாகப் பாடியிருப்போம். அது மட்டுமல்ல ! அவ்வாறு கழுவேற்றிய மன்னனைப் பாராட்டிப் பல பாடல்கள் இயற்றியிருப்போமல்லவா? அவ்வாறு ஒரு பாடலாகிலும் எங்கள் நூலில் சான்று காட்டவியலுமா? அகச்சான்று ஒரு சிறிதும் காணவியலாத நிலையில் எங்களைக் கொலைக் குற்றவாளிகளாகக் கற்பித்து உலகோர் முன் குற்றவாளிக் கூண்டில் நிறுத்திக் காட்டுவதை யாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். சமய வெறி தலைக்கேறிய யாரோ எங்கள் காலத்திற்குப் பின்னர் மேற்கண்ட கழுவேற்றுக் கதையை எங்களோடுப் பிணைத்துப் புராணங்கள் பாடி விட்டார்கள். அப்போலிக் கதைக்கு அகச்சான்று உள்ளதா எனச் சிந்தித்துப் பாராமல் அதனை உண்மை என நம்பிச் சிலர் புராண பிரசங்கங்கள் பெயராலும், எங்கள் வரலாற்றை எழுதுவதன் வாயிலாகவும், ஆய்வுரை என்ற பெயரால் இப்படுகொலையை உறுதிப் படுத்தியும், சிலர் நாடகங்களாக நடத்தியும், சில கோயில்களில் கழுவேற்று விழாக் கொண்டாடியும் வருவதை நாங்கள் கவனித்துக் கொண்டுதான் வருகிறோம். அந்தச் சமயங்களில் எங்கள் உள்ளம் கொதிப்பேறி விடுகிறது. எங்களைப் போற்றுவதாகக் காட்டும் அவர்களை நாங்கள் பக்தர்களாக மதிப்பதில்லை; பகைவர்களாகவே கருதுகிறோம். எங்களுக்கு மட்டுமல்ல; சைவ சமயத்திற்கே பெரும் பகைவர்களாவர் என அவர்கள் இழிசெயலை வெறுக்கின்றோம். இறுதியாக ஒன்றை இங்குக் கூறி விடுகின்றேன்.

நாங்கள் புதிதாக விதைத்துள்ள மேற்கண்ட காபாலிகம், காளாமுகம், பாசுபதம் போன்ற விதைகளின் கோரக் கொள்கைகளால் விளைந்த விளைவுகளைக் குறித்து, பௌத்த பிட்சுக்கள் கற்பனையாக ஒரு கதையைக் கட்டித் தங்கள் சங்கங்களில் விளக்கிவந்தனர். அவ் அற்புத கதையைக் கேளுங்கள்.

## தலைமைப் பிட்சுவின் கதை விளக்கம்

புனிதர்களே ! நாமும் சமணச் சான்றோர்களும் மக்கள் அறிவிற்கும், வாழ்க்கைப் பண்பிற்கும் உரிய நல்லறங்களைப் பரப்பி வந்தோம். இந் நல்லறங்களைக் கடைப்பிடித்து மக்கள் வாழ்ந்து வந்ததால், நரக கதிக்குச் செல்லும் கூட்டம் குறைந்துவிட்டது. இந்நிலையைக் கண்ட நரக தூதர்களாகிய சைத்தான்கள் ஒன்று கூடி, தங்கள் தலைமைச் சைத்தானிடம் சென்று, 'தலைவர் பெருமானே ! நம் நரகத்திற்கு வரும் கூட்டம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகின்றது.

பல பகுதிகள் காலியாகவே கிடக்கின்றன. நம் ஆயுதங்கள் எல்லாம் துருப்பிடித்து பாழாகின்றன. ஈட்டிகளின் கூர்மை மழுங்கி

விடுகின்றது. அக்னி குண்டங்களில் தீ சாம்பலாகி விட்டது! எங்களுக்கோ உற்சாகமில்லை! பேய்களெல்லாம் பசியால் வாடுகின்றன. ஒன்றும் தெரியாமல் விழிக்கின்றோம். பூலோகத்தில் ஏதேனும் மாறுதல் ஏற்பட்டுள்ளதோ என அஞ்சுகிறோம்' என ஓலமிட்டனவாம்.

உடனே நரகத் தலைமைச் சைத்தான், 'அஞ்சாதீர்கள்! தூதர்களே! இப்போது உலகில் பௌத்த சமணர்களின் நன்னெறிப் பிரச்சாரம் பலமாக நடந்து வருகிறது. அதற்குரிய பல நூல்களை இயற்றி மக்களிடையே பரப்பி வருகிறார்கள். இந்நன்னெறிகளை மக்கள் பின்பற்றி நற்பண்பு பெற்று வாழ்கிறார்கள். அதனால் பெரும்பாலான மக்கள் தங்கள் மறுபிறவியில் உயர் பிறவி எடுக்கின்றார்கள். பலர் வானுலகமேகி விடுகிறார்கள். சிலர் வீடுபேறே பெற்று விடுகிறார்கள். அதனாற்றான் நம் நரகத்திற்கு ஆட்கள் வருவதில்லை! ஆனாலும் நம்பிக்கை இழக்காதீர்கள். விரைவில் சமண பௌத்த நெறிகளுக்கு முற்றிலும் மாறான பல்வேறு கொள்கைகளைப் பரப்பும் சமயாச்சாரியர்கள் தோன்றப் போகிறார்கள். அவர்கள் பிரச்சார பலத்தினால் மக்கள் திசை திரும்பி விடுவார்கள். அன்று முதல் நம் நரகத்திற்கு ஏராளமானக் கூட்டம் வரத் தொடங்கும். அவர்களுக்கு இடமளிக்கும் பிரச்சினையே நமக்குப் பெரிதாகி விடும். அது வரை பொறுத்திருங்கள்' எனக் கூறிற்றாம். இந்த கதையைப் புத்தபிட்சுக்கள் தங்கள் சங்கங்கள் தோறும் பேசி இக் கதையைப் போன்றுதான் இன்று நாட்டில் நடைபெறும் மாற்றுக் கொள்கையாரின் காபாலிக காளாமுக விபரீதப் போக்கு என எங்களைக் குறிப்பிட்டுப் பேசி வந்தார்கள். இச் செய்திகள் எங்கள் செவிகளுக்கும் எட்டின. இக்கதையைக் கேட்டு நாங்கள் கோபம் கொள்ளவில்லை. அதற்கு மாறாக புத்தபிட்சுக்களின் சிந்தனைத் திறனையும், அச்சிந்தனையிலுதித்த கற்பனைக் கருவூலத்தையும், அக் கற்பனை காட்டும் தற்காலத் தமிழக நிலையின் விசித்திர காட்சியையும் எண்ணி எண்ணி வியப்புற்றோம். இவ் அரிய செய்தியையும் உங்களிடையே மறைக்காமல் கூறி விட்டோம்.

## ஆவி விடைபெற்று ஏகுதல்

சகோதரர்களே! என் ஆப்த நண்பர் திருநாவுக்கரசர் தம் முடிவுரையில் எதையும் ஆராய்ந்து பாராத மனமுடையார்க்கு அவர் புகட்டிய பொன்மொழிகளை யானும் வலியுறுத்தி என் உரையை முடிக்கின்றேன். யான் குடியிருந்த என் உடல் இது வரை அசைவற்றுக் கிடக்கும். ஆகவே யான் விரைவில் சென்று அவ் உடலில் புகவேண்டும். இல்லையேல் அங்குள்ள மக்கள் அசைவற்ற நிலையைக் கண்டு, பிணமெனக் கருதி அவ்வுடலை பூமியில் புதைத்து விடுவார்கள். போக விடை பெறுகிறேன்! வணக்கம்!

குறிப்பு: மயிலை கஸ்தூரி ஆர்ட்ஸ் கிளப்பைச் சார்ந்தவர்கள் 28-11-1965ல் 'ஞானப்பால்' நாடகம் நடத்தியபோது இஃது அச்சிட்டு நாடக அரங்கில் பலருக்கும் வழங்கப் பெற்றது. 'ஞானப் பால்' நாடகத்தைத் தடைசெய்யக் கோரி தமிழ்நாடு ஜைன சங்கம் தமிழக அரசுக்கு ஆட்சேபனை மனு அளித்தது. அது சமயம் (1965ல்) தமிழக முதலமைச்சராய் விளங்கிய மாண்புமிகு M. பக்தவத்சலம் அவர்கள் இம் மனுவை ஏற்று, விசாரணை செய்து இந்நாடகத்திற்குத் தடை விதித்துப் பறிமுதல்செய்தார் என்ற மகிழ்வுடன் அப்பெரியாருக்கு நன்றி செலுத்தி வணங்குகிறோம்.

இங்கனம்,

**தமிழ்நாடு ஜைன சங்கத்தார்.**

## இந்நூல் கிடைக்குமிடங்கள்

**A. சந்திரநாத் ஜெயின்**
அண்ணமங்கலம்,
வளத்தி, (P.O.) S.A.Dt.

★

**K. J. அகஸ்தியப்ப ஜெயின்**
51, வள்ளல் பச்சையப்பன் தெரு,
காஞ்சிபுரம்.

★

**V. N. பொன்னுசாமி நயினர்**
குந்தகுந்தர் தபோகிரி
பிரபந்தக் கமிட்டி
பொன்னூர்மலை,
வட வணக்கம் பாடி (P.O.)
வந்தவாசி T.K. N.A.Dt.

★

**ஜைன இளைஞர் மன்றம்**
1-A, போக் ரோடு,
தியாகராயநகர்,
சென்னை-17.

★

**விலை ரூ. 0-50**

## இனி வெளிவரும் ஆய்வு நூல்கள்

**இரயில் பயணத்தில் உரையாடல்**
ஆசிரியர் : ச. விருஷபதாஸ் ஜெயின்
(இரண்டாம் பதிப்பு)

**தமிழர் வீழ்ச்சி**
ஆசிரியர் : நீல. துரைக்கண்ணன்
(இரண்டாம் பதிப்பு)

**அகளங்கர் விஜயம்**
ஆசிரியர் : K. J. அகஸ்தியப்ப ஜெயின்
முதற் பதிப்பு (நாடகம்)

S. தன்யகுமார் பிரஸ், சென்னை-600 017